1975 அக்டோபர் 24]

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கல்வித் துறையின் 17—1—1974 நாளிட்ட 63-ஆம் எண் அரசாணை, 9—10—1974 நாளிட்ட 1750 ஆம் எண் அரசாணை ஆகியவற்றின்படி தனியார் நிர்வாகப் பள்ளிகளில் பணியாற்றிவரும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் மட்டுமே, முதல் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்களுக்கும் அச்சலுகையை நீட்டிக்காததற்கான காரணம் என்ன ?

(உ) இக்குறையைக் களைவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) அரசாணை எண் 63, கல்வி, நாள் 17—1—74 மற்றும் அரசாணை எண் 1750, கல்வி, நாள் 9—10—74-ல் இடப்பட்ட உத்தரவுகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை

Conversion of Sea-water into Drinking-water and Sewage water into Fertilizer.

* 7 Q.—THIRU D. V. D. MONTE : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether the Tamil Nadu Water Supply and Drainage Board has any proposals to convert sea-water into drinking-water, and sewage water into fertilizer, to minimise river pollution ; and

(b) if so, the details thereof?

[1975 அக்டோபர் 24

கடல் நீரைக் குடி நீராகவும் சாக்கடை நீரை உரமாகவும் மாற்றுதல்

திரு. டி. வி. டி'மாண்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கடல் நீரைக் குடி நீராக மாற்றுதல், ஆற்று நீர் தூய்மை கெடுவதை இயன்ற அளவுக்குக் குறைக்கும் வகையில் சாக்கடை நீரை உரமாக மாற்றுதல் ஆகியவை குறித்த திட்டங்கள் எவையேனும் தமிழ் நாடு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியத்திடம் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் தொழில் நுணுக்க வல்லுநர்களின் ஆலோசனையுடன் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. கழிவுநீரை உரமாக மாற்றும் திட்டம் எதுவும் இல்லை.

THIRU D. V. D' MONTE: May I know, Sir, whether any preliminary research has been made in this direction?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கடல் நீரை குடிநீராக்குவது என்பதற்கான சோதனைகள் செய்வது, அவற்றை அமைப்பது ஆகியவற்றைப்பற்றி தொடக்க நிலையிலேயே ஆய்வு நடத்தியதிலிருந்து, ஏறத்தாழ ஆயிரம் காலனுக்கு குடிநீராக்க இரண்டு ரூபாய் முதல் இரண்டரை ரூபாய் அளவுக்குச் செலவாகும் என்று புள்ளிவிவரத்திலிருந்து தெரிகின்றது. இந்தத் திட்டத்திற்கு, உவர் நீக்கும் இயந்திரங்களால் கிடைக்கும் குடிநீருக்கு 1,000 காலனுக்கு ரூ. 13 அளவுக்குச் செலவாகும் என்று தெரிகின்றது. இதற்கான இயந்திரங்களைக்கூட உலகத்திலே ஒன்றிரண்டு நாடுகளிலிருந்துதான் வரவழைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஆகின்ற பெரும் செலவுகளையும், திட்டத்திலுள்ள கடினங்களையும் குடிநீர் வடிகால் வாரியம் ஆராய்ந்தது. திட்டத்தை நிறைவேற்ற பெருமளவு முயன்றது. பெரிய திட்டமாகச் செயல்படுத்துவது உடனடியாகப் பயனளிக்காது என்ற அளவில் விரைவு செயல்முறைக் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சிறு கிராமமொன்றில் உவர் நீரை, உப்பு நீரை குடிநீராக்கும் இயந்திரத்தை அமைப்பதற்கான திட்டத்தை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு செய்து, அந்த முறையிலே ரூ. 30,000 செலவில் உவர் நீக்கும் இயந்திரத்தை அமைக்கலாம் என்று எண்ணியிருக்கிறது. இதற்கான கிராமத்தின் பெயரை நாளாவட்டத்தில் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமென்றிருக்கிறது. இதற்கு பவநகரில் உள்ள மத்திய உப்பள ஆராய்ச்சி நிறுவனத்தாரை இவ்வேலையை எடுத்துச் செய்ய வேண்டிக்கொள்ளலாம் என்று வாரியம்

முடிவெடுத்தது. அண்மையில் இதுபோன்ற இயந்திரங்கள் பற்றிய அறிக்கை வெளியிட்ட வெளிநாட்டில் அமைந்துள்ள உவர் நீக்கும் திட்ட அலுவலகத்துடன் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் தொடர்பு கொண்டு வருகிறார். சென்னை பெருநகர் வளர்ச்சி நிறுவனத்திற்காகச் செய்யப்பட இருக்கும் முன் ஆதார ஆராய்ச்சிகள் பலவற்றுள் குடிநீருக்கான உவர் நீக்கும் இயந்திரம் அமைப்பதும் ஒன்றாகும். இவைகள் எல்லாம் ஆராய்ச்சிக் கட்டத்திலேதான் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: பள்ளிப்பாளையம் பேப்பர் மில்லிலிருந்து ஏராளமான கழிவு நீர் நல்ல தண்ணீரில் போய்க் கலக்கிறது. அதே மாதிரி உய்யகொண்டான் ஆற்றிலும் கழிவு நீர் போய்க் கலக்கிறது. மேலும் தாமிரபரணி ஆற்றிலும் கழிவு நீர் போய்க் கலக்கிறது. இதனால் கால்நடைகளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் கெடுதல் ஏற்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இங்கு கேட்கப்பட்டிருக்கும் கேள்வி கடல் நீரைக் குடிநீராகவும் சாக்கடை நீரை உரமாகவும் மாற்றுதல் பற்றியதாகும். சில இடங்களிலே ஆற்று நீரிலோ, மக்கள் குடி நீருக்காகப் பயன்படுத்தும் நீர் நிலைகளிலோகூட கழிவு நீர் போய்க் கலந்து விடுவது பற்றி உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு கழிவு நீர் கலப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு ஆராய்ச்சி நிலையம்கூட செயல்பட்டு வருகிறது. அதுவும் எப்படி எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்பதுபற்றிப் பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. அது தனிப்பட்ட பிரச்சினை.

THIRU G. VASANTHA PAI: Will the Government kindly consider the conversion of sewage water with chemicals into fertilisers, as has been done in countries like America as well as in Joramberg Sanctuary in Singapore? I am told that it is easy of achievement and also not very costly. It is done by pumping this sewage water through jets mixed with chemicals to a great height from where it comes downstream and the slopes of land have been fertilised that way. Will the Government kindly consider this project?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்படிப்பட்ட சாக்கடை நீரை மக்கள் தொகை அதிகமாக உள்ள வட்டாரத்தில்தான் நாம் பார்க்க முடிகிறது. அந்த நீரை நீண்ட தூரம் கொண்டுபோவது என்பது பிரச்சினையாக இருக்கிறது. கழிவு நீர்த் திட்டமே இன்னும் முழு வெற்றி பெறவில்லை. குடிநீர்

வழங்கு-வடிகால் வாரியத்தின் முக்கிய பணியே மக்களுக்குத் தேவைப்படும் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதுதான். அதற்காகவே தன்னிடமுள்ள பெரும்பாலான நிதியையும் செலவிடுகிறது. மேலும் குடிநீர் வழங்கு-வடிகால் வாரியத்திற்குப் போதுமான கடன் தொகையும் கிடைக்கவில்லை. 'சுயேஜ்' திட்டமே இன்னும் முழு வெற்றி பெற முடியாத நிலை இருக்கின்றது. அதற்கென்று ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அந்த அமைப்பின் மூலமாக பெரிய பெரிய இயந்திரங்களின் மூலமாக, உயரமான இடங்களுக்குக் கொண்டு சென்று, அதன் மூலமாக உரம் எடுப்பது என்பது தற்போதைய நிலையில், பொருளாதார நிலை காரணமாக, உடனடியாக எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, one of the reasons for the excessive consumption of water in Madras City is that we are using drinking water also for industrial and sanitary purposes. May I know whether the Tamil Nadu Water-Supply and Drainage Board has suggested any scheme whereby for industrial or sanitary purposes, water could be used separately and not mixed up with drinking water mains, as is being done in other major Cities?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை நகரம் முழுவதற்கும் தண்ணீர் வழங்குகின்ற புழலேரித் தண்ணீரானது மக்களின் அன்றாடத் தேவையில் 95 சத விகிதத்தைப் பூர்த்தி செய்கிறது. நமக்கு நல்ல தண்ணீர் கிடைப்பதோ புழலேரி ஏரியிலிருந்து மட்டும்தான். நமக்கு புழலேரி மாதிரி நிறைய தண்ணீர் கிடைக்கக் கூடிய ஒரு ஏரி கூட இருந்திருந்தால்,—அது நல்ல தண்ணீராக இல்லாமல் உப்புத் தண்ணீராக இருந்தால்கூடப் பரவாயில்லை—நாம் அந்தத் தண்ணீரை ஓரளவுக்குச் சுத்தப்படுத்தி, இன்னொரு குழாய் மூலம் அந்தத் தண்ணீரைச் செலுத்தி, மக்கள் குடிப்பது தவிர வேறு காரியங்களுக்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தும்படி செய்து, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். ஆனால் கடல்நீரைக் குடிநீராக மாற்றுவதில் ஏராளமான சிரமங்கள் இருக்கின்றன. டில்லி போன்ற இடத்தில் இரண்டு குழாய்கள் மூலம் தண்ணீரை விடுகிறார்கள். ஒன்று குடிநீர் செல்லும் குழாய், மற்றொன்று மற்ற தேவைகளுக்கு. நமக்கும் அதுமாதிரி ஏராளமாகத் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு இருந்திருக்குமானால், பரிசீலித்திருக்கலாம்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : பம்பாயில் சாக்கடை நீரை குடிநீர் வழங்கு-வடிகால் வாரியம் சுத்தப்படுத்தி, நல்ல தண்ணீர் ஆக்குவதாகவும், அதைப் பார்வையிடுவதற்காக ஒரு பிரதிநிதிக் குழுவை தமிழ் நாட்டிலிருந்து பம்பாய்க்கு அனுப்பியதாகவும் சொல்லப்படுகிறது. அப்படி அனுப்பப்பட்டிருந்தால், அந்தப் பிரதிநிதிக் குழு அங்கு போய் வந்ததனால் ஏற்பட்ட பலா பலன் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1975 அக்டோபர் 24]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி குடிநீர் வழங்கு-வடிகால் வாரியத்தின் சார்பில் ஒரு பிரதிநிதி பம்பாய்க்குச் சென்று சாக்கடை நீரைச் சுத்தப்படுத்தும் திட்டத்தைப் பார்த்து வந்தாரா என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, சாக்கடை நீரைச் சுத்தப்படுத்திய பின், அந்த நல்ல தண்ணீரை தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்கு தொழிலதிபர்கள் தாமாக முன்வந்தால், அந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கான ஒரு யோசனை அரசுக்கு இருக்கிறது. தொழிலதிபர்கள் முன்வருவார்களேயானால், நிலையாக அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் ஒரு வாய்ப்பு உண்டாகும்.

Scarcity of Medicines in Government Hospitals, Madras.

* 8. *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the scarcity of medicines found in the Government Hospitals, Madras, has been brought to the notice of the Government; and

(*b*) if so, the reason for the scarcity of medicines?

சென்னை அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னையிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை இருந்துவருவதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதா ?

(இ) ஆமெனில், அப்பற்றாக்குறைக்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னையிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை ஏற்படவில்லை. எல்லா மருந்துகளும் மருத்துவமனைகளில் உள்ளன. எந்த ஒரு மருத்துவமனையிலிருந்தும் மருந்துகள் இல்லை என்ற புகார் வரவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மைய மருந்தகத்திலிருந்து அரசாங்க மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் அனுப்புவதில் 7 நாள், 10 நாள் வரை தாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக அரசாங்க மருத்துவ மனைகளில் மருந்துகள் பற்றாக்குறை ஏற்படுகிறது. மைய மருந்தகத்திலிருந்து மருந்துகள் மிகத் தாமதமாக வருவதாகப் புகார் கூறப்படுவதுபற்றி அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.